எம்.ஐ.டி:2021-22:புல முதல்வர் அலுவலகம் நாள்: .07.2022

அண்ணா பல்கலைக்கழகம், உள்ள எம்.ஐ.டி வாளகத்தில் உள்ள ராஜம் அரங்கத்தில், உபயோகமற்று இருக்கும் சில தேவையற்ற பொருட்கள் எங்கு எப்படி உள்ளனவோ, அங்கு அப்படியே அதே நிலையில் ஏல விற்பனை செய்யும் பொருட்டு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏலதாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பெறுவதற்கு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) க்கான வரைவு காசோலையினை "பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம்" (THE REGISTRAR, ANNA UNIVERSITY) என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் ஏதேனும் ஒரு கிளையிலிருந்து சென்னையில் மாற்றத்தக்கவகையில் எடுத்து வரவேண்டும். இந்த தொகை திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைப் பெற வருபவர்கள் நடப்பு நிதியாண்டு 2022-2023க்கான விற்பனை வரிசான்றிதழ்(Sales Tax Certificate), மற்றும் சமீப்பத்திய GST Certificate, PAN Card, IT Return(2021-22) இவையணைத்திற்கும் நகல்கள் வைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைப் பெற்றவர்கள் மட்டுமே ஏலப்பொருட்களை பார்வையிடவும் ஏலத்தில் பங்கு கொள்ளவும் அனுமதிக்கப்படுவர். ஏலத்தின் விபரங்கள் அனைத்தும் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை எம்.ஐ.டி வாளகம் Administrative Block முதல் தளத்தில் உள்ள புல முதல்வர் ஆலுவலகத்திலுருந்து 22.07.2022 முதல் 01.08.2022 வரை (சனி மற்றும் ஞாயிறு தவிர) காலை 10.30 மணிமுதல் மாலை 3.00 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் 02.08.2022 மாலை 3.00 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி அட்டவணைக்கும், ஒப்பந்தப்புள்ளியுடன் ரூ.500/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வைப்புத் தொகை "பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம்" (THE REGISTRAR ANNA UNIVERSITY) என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் ஏதேனும் ஒரு கிளையிலிருந்து சென்னையில் மாற்றத்தக்க வகையில் வரைவு காசோலையினை யும் சேர்த்து அனுப்பவேண்டும்.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் எம்.ஐ.டி வாளகத்தில் உள்ள Administrative Block - ல் தரைதளத்தின் உள்ள Seminar Hall – ல், வருகை புரிந்துள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் ஏல அலுவலர் அவர்களால் 02.08.2022 - ந்தேதி மாலை 3.30 மணிக்குத் பிரிக்கப்படும். கொரோனா பாதுகாப்பு காரணமாக ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒருவர் மட்டும் அனுமதிக்கப்படுவர் .

ஏல அலுவலருக்கு ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் நிராகரிப்பதற்கும் ஏலத்தினை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதற்கும் முழு உரிமை உண்டு.

ஏலப்பொருட்களின் ஏலமதிப்பீட்டுத் தொகை மிகவும் குறைவாக இருப்பின் எந்த காரணமுமின்றி ஏலத்தை ரத்து செய்துவிட்டு மறு ஏலஅறிவிப்பு கோருவதற்கு ஏலஅலுவலருக்கு முழு உரிமை உண்டு.

மொத்த ஏலத்தொகையில் 18% கூட்டுவரி கூடுதலாக செலுத்த வேண்டும். ஏலமதிப்பீட்டுத்தொகை அதிகமாக கோரி ஏலம் எடுக்கும் ஏலதாரர் மற்றும் அடுத்து அடுத்து ஏலத்தொகை அதிகமாக கோரும் இரு ஏலதாரரின் வைப்புத்தொகை ரூ.500 காசோலையை வைத்துக்கொண்டு மற்ற அனைவர்க்கும் ரூ.500 வைப்புத்தொகை திருப்பிக்கொடுக்கப்படும்.

இது பற்றிய மேலும் விவரங்கள் அறிய இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 10.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

27/7/22

ஏல அலுவலர்
AUCTION OFFICER
Madras Institute of Technology Campus
Anna University,
Chromepet, Chennai - 600 044.

குறிப்பு: இவ்வலுவலக தொலைபேசி எண்: 044 2251 6005

பெறுநர்:
ஏலதாரர்கள்

நகல்:
1. பதிவாளர் அண்ணா பல்கலைக்கழகம்
2. புலமுதல்வர்
3. உதவிப்பதிவாளர்
4. அனைத்து தகவல் பலகைகளுக்கும்
5. கட்டுக்கோப்பு

| | |
|---|---|
| ANNA UNIVERSITY — PROGRESS THROUGH KNOWLEDGE | எம்.ஐ.டி. வளாகம் - அண்ணா பல்கலைக்கழகம் - சென்னை - 600 044 |

## ஏலதாரர்களுக்கு சில குறிப்புகள்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டும் ஏல அட்டவணையில் கண்டுள்ள ராஜம் அரங்கத்தில் உள்ள ஏல விற்பனைப் பொருட்களை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவர்

2. ஒப்பந்தப்புள்ளி உறை மூடி முத்திரையிடப்பட்டு இருக்க வேண்டும். வைப்புத்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். கீழ் கண்ட ஆவணங்கள் GST Certificate, PAN Card, IT Return (2021-22) சமர்ப்பிக்கவும் இவையனைத்திற்கும் நகல் வைத்து அனுப்பவேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பு எண்:01/Condemnation/ஏலம்/2022 ஏலம்:2022நாள்:01.08.2022 ஒப்பந்தப்புள்ளி அட்டவணை எண்-1 என்று தவறாமல் குறிப்பிடவேண்டும்.

4. ஏலதாரர்கள் ரூ500-க்கான வரைவு காசோலை "பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம்" (THE REGISTRAR, ANNA UNIVERSITY) என்ற பெயரில் வைப்புத்தொகையாக மூடி முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை எண் 2 உடன் இணைத்து 02.08.2022 ஆம் தேதி பிற்பகல்3.00 மணிக்குள் கிடைக்கும் படி ஏல அலுவலர் Administrative Block, முதல் தளம், எம்.ஐ.டி வளாகம் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

5. தேர்ந்தேடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் வைப்புத்தொகை, ஏலத்தொகையினை முழுவதுமாக செலுத்திய பிறகு ஆணைகள் வழங்கி, ஏலப் பொருட்கள் முழுவதும் எடுத்தப்பின்னரே வழங்கப்படும். வெற்றிப்பெறாத மற்ற ஒப்பந்ததாரர்களின் வைப்புத்தொகை ஏல ஆணை வழங்கப்பட்ட பின்னரே வழங்கப்படும்.

6. மொத்த ஏலத்தொகையில் கூட்டுவரி 18% கூடுதலாக வரியினையும் சேர்த்து செலுத்த வேண்டும். (அதாவது ஏலத்தொகை +18% கூட்டுவரி)

7. ஏல ஆலுவலரால் உறுதி செய்யப்பட்டப் பின்னரே ஏலம் முடிந்ததாக கருதப்படும். ஏலத்தொகை மற்றும் விற்பனை வரியினை முழுவதுமாக செலுத்தி, அதற்கான ஆணை பிறப்பித்தப் பின்னரே ஏலப் பொருட்களை பெற்ற ஏலதார் எடுத்து செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

8. ஏலப் பொருட்களை ஏலத்தில் பெற்ற ஒப்பந்ததாரருக்கு வழங்குவது ஆல்லது எக்காரணமுமின்றி நிறுத்தி வைப்பது ஆகியவை குறித்து அனைத்து ஆதிகாரங்களும் ஏல அலுவலருக்கு உண்டு.

9. ஏலப் பொருட்களின் மொத்த மதிப்புத்தொகை மிகவும் குறைவாக மதிப்பீடு செய்யும்பட்சத்தில் ஏலத்தை ரத்து செய்துவிட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஏல அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

(signature) 29/7/22

ஏல அலுவலர்

**AUCTION OFFICER**
Madras Institute of Technology Campus
Anna University,
Chromepet, Chennai - 600 044.